Prof. Dr. K Kasthurirangaian
Chairman

603 'C' Block, Pioneer Complex, 1075, Avinashi Road
Coimbatore - 641 108 INDIA
Phone : 91-422-6585908, 6586908
Fax : 91-422-2248408
E-mail : chairmaniwpa@windpro.org

INDIAN WIND POWER ASSOCIATION
IWPA
helping mankind with energy from nature

21-01-2016

**அம்மா அழைப்பு மையம் மூலமாக தமிழக முதலீட்டாளர் மற்றும் தொழில் செய்வோரின் ஒரு கோரிக்கை**

**முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா அம்மா அவர்களுக்கு,** 1300 காற்றாலை மின் உற்பத்தியாளர்களின் பனிவன்பான வணக்கங்கள். அம்மா அழைப்பு மையம் ஏற்படுத்தியதற்கு நன்றி.

தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்க எங்கள் ஒத்துழைப்புடன் கூடிய வேண்டுகோளும் எதிர்பார்ப்பும் தவிர யாரையும், இது யார் மேலும் குற்றம் சுமத்தும் மனு அல்ல.

7480 MW காற்றாலை நிறுவு திறனுடன் இந்தியாவிலேயே தமிழகம் முதல் மாநிலமாக திகழ்கிறது.

மாசு இல்லாத, விலை மலிவான, காற்றாலை மின்சாரம் உற்பத்திக்கு எரி பொருளோ, தண்ணீரோ முற்றிலும் தேவைப்படுவதில்லை. சுற்று சூழல் பாதுகாவலனாக விளங்குகிறது.

காற்றாலை மின்சாரம் பருவ காலத்தை ஒட்டியதாகவும் ஏற்ற தாழ்வுகள் கூடியதாக இருந்தாலும் மேம்பட்ட தொழில் நுட்பத்தினால் வரவிருக்கும் காற்று உற்பத்தியை முன்பே துல்லியமாக நிர்ணயிக்கப்பட்டு 10% எல்லைக்குள் கணித்து முன்னறிவுப்புடன் காற்று சக்தியை முழுமையாக ஏற்று கொள்ளமுடியும். முன் அறிவிப்பு தகவல் கொடுத்து வருகிறோம்.

இது தொடர்பாக நாங்கள் எங்கள் முயற்சியால் சமீபத்தில் முன் அறிவிப்பு பொறி நுகர் கருவிகள் தமிழக மின் தொகுப்பில் எல்லா காற்றாலை துணை மின் நிலையங்களிலும் சென்னையிலும் நிறுவி அடுத்து வரும் 8 நாட்களுக்கு 15 நிமிட கால அவகாசங்களில் முன் கூட்டியே காற்றாலை மின்சாரம் உற்பத்தி கிடைக்க கூடிய

தகவல்களை தேசிய காற்று சக்தி நிறுவனம் (National Institute of Wind Energy = NIWE) மூலம் தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர்களுக்கு கொடுத்து வருகிறோம்.

மின் உற்பத்தி குறித்த தகவல் NIWE கொடுத்து இருந்தும், இரவு 10 மணிமுதல் காலை 6மணி வரை காற்றாலைகள் மின் தொகுப்பில் இருந்து நீக்கி வைக்கப்படுகிறது. உற்பத்திதிறன் இதனால் பாதிக்கப்படுவதால் காற்றாலைகளின் உற்பத்தியும் அதை சார்ந்த தொழிற்சாலைகளின் உற்பத்தியும் வெகுவாக பாதிக்கபடுகிறது. இம்மாதிரியான மின் உற்பத்தி இழப்பு திறைமையான நம் தமிழக மின் பொறியாளர்களால் தவிர்க்கப் பட கூடியதே ஆகும்.

முன்னோடியாக உள்ள பல வெளி நாடுகளில் அனல் மின் நிலைய உற்பத்தியை தேவைக்கேற்ப தகுந்தாற்போல் குறைத்துக் கொண்டு காற்றாலை மின்சாரத்தை வீணக்காமல் முழுமையாக பயன்படுத்துகிறார்கள். இதில் சிறப்பாகவும், முன்னோடியாகவும் டென்மார்க் விளங்குகிறது.

ஆகவே தமிழ்நாடு மின் வாரியத்தை சேர்ந்த 3 மின் பொறியாளர்களை இரண்டு வார பயிற்ச்சிக்காக டென்மார்க்குக்கும், சுவிட்சர்லாந்துக்கும் அனுப்பி வைத்தோம். கடந்த 2012 ஏப்ரல் முதல் டிசம்பர் முடிய உள்ள காலத்தில் 10212 மில்லியன் யூனிட் காற்றாலை மின்சாரத்தை ஏற்று கொண்ட மின்சார வாரியம் 2015 ல் அதே காலகட்டமான ஏப்ரல் முதல் டிசம்பர் முடிய உள்ள காலத்தில் 6108 மில்லியன் மின்சாரத்தை மட்டுமே ஏற்றுக் கொண்டுள்ளது. காற்றாலை மின்சாரத்தை ஏற்பது 40% குறைந்து விட்டது. 4104 மில்லியன் யூனிட் காற்றாலை மின்சாரம் ஏற்கப்படவில்லை. வீணாகிவிட்டது. இதனால் தமிழகத்துக்கும், தமிழ்நாடு மின் வாரியத்துக்கும் , மின் உற்பத்தியாளருக்கும், மின் நுகர்வோருக்கும் மலிவான, சுற்று சூழல் நட்பு தோழனான மாசற்ற காற்றாலை மின்சாரம் நஷ்டமாகி விட்டது. பதிலாக அதிக விலையுள்ள அனல் மின்சாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது. இந்த குறையை மத்திய தணிக்கை குழுவும் (CAG) சுட்டிக் காட்டியுள்ளது.



Indian Wind Power Association
Door No. E, 6th Floor, Tower -1, Shakti Towers, No. 766, Anna Salai, Chennai 600 002
Ph : 044 4550 4036 | Fax : 044 4550 4281 | E-mail : iwpacno@windpro.org / secretary.general@windpro.org | Website : www.windpro.org

மலிவான, மாசில்லாத காற்றாலை மின்சாரத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வப்போது காற்றாலைகளை மின் தொகுப்பில் இருந்து வெட்டி விட கூடாது என்று தாங்கள் மின்வாரியத்திற்கு ஆணையிட்டு தமிழ்நாட்டின் காற்றாலைகளையும், அந்த மின்சாரத்தை நம்பியுள்ள தொழில்களையும் காக்க வேண்டுகிறோம்.

அம்மா அழைப்பு மையம் வாய்ப்பு அளித்ததற்கு மிக்க நன்றி.

எங்கள் கோரிக்கை விரைவில் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் இந்த விண்ணப்பத்தை சமர்பிக்கிறோம்.

இப்படிக்கு

தங்கள் அன்புள்ள

மின் உற்பத்தியாளர்களுக்காக
கே.கஸ்துாரிரங்கையன்
தலைவர்



Indian Wind Power Association
Door No. E, 6th Floor, Tower -1, Shakti Towers, No. 766, Anna Salai, Chennai 600 002
Ph : 044 4550 4036 | Fax : 044 4550 4281 | E-mail : iwpacno@windpro.org / secretary.general@windpro.org | Website : www.windpro.org